முச்சந்தி முரளி



“திலீபன் நினைவுநாளுக்குத் தடைபோட்டு மூக்குடைபடுகிறது பொலிஸுக்கு பழகிட்டு போல”

Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 298

வியாழக்கிழமை
19 செப்ரெம்பர் 2024

புரட்டாதி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# திலீபனை அஞ்சலிக்க எந்தத் தடையுமில்லை

## பொலிஸாரின் சமர்ப்பணத்தில் திருப்தியில்லை
## யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 19**

**யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில், அஞ்சலி நிகழ்வை நடத்துவதற்கு பொலிஸார் தடைகோரிய நிலையில், பொலிஸாரின் கோரிக்கைக்கு இணங்கித் தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.**

11

# 20 லட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறுவது உறுதி

## சஜித் நேற்று ஆணித்தரம்



கொழும்பு, செப். 19
புலனாய்வுத்துறை அறிக்கையின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தி 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறும். ரணில், அநுர ஜோடி கீழ் மட்டத்திலே இருக்கிறது என்று ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் தெரிவித்துள்ளார்.
மொனராகலையில் 11

# மக்களுக்கான ஆட்சி இதுவரை நடக்கவில்லை

## அநுர ஆவேசம்



கொழும்பு, செப். 19
இலங்கையில் இதுவரை மக்களுக்கான ஆட்சி நடைபெறவில்லை. மாறாக அரசியல் தலைவர்களுக்கான ஆட்சிகளே நடந்திருக்கின்றன என்று அநுர குமார தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:- 09

# வாக்காளர் அட்டைகளை அஞ்சலகத்தில் பெறலாம்

கொழும்பு, செப். 19
இதுவரை வாக்காளர் அட்டைகிடைக்காதவர்கள் நாளை 20 ஆம் திகதி அஞ்சல் அலுவலகத்திற்குச்சென்று தமது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள 11

# ஜனாதிபதித் தேர்தலில் பின்வாங்கவே மாட்டேன்

## வதந்திகளைப் பரப்புவார்கள் நம்பவேண்டாம்
## மக்களிடம் தமிழ்ப் பொதுவேட்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 19
எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து பின்வாங்க மாட்டேன். ஒருபோதும் நான் விலை போக மாட்டேன். இன்றுடன் (நேற்று) தேர்தல் பரப்புரைப் பணிகள் முடிவுக்கு வருவதால், அடுத்தடுத்த நாள்களில் போலித் தகவல்களை பரப்ப சதிகாரர்கள் முயற்சிக்கக் கூடும். எனவே பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று 11



# 22 மாவட்டங்களில் ரணில் முன்னிலை!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 19
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகூடிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். 160 தேர்தல் தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கு அமைய 22 மாவட்டங்களில் ரணில் முன்னிலையில் உள்ளார் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 11

## உயிரிழப்புகள்

**கிருமித் தொற்றால் சிசுவொன்று இறப்பு**

**ஓமந்தையில் விபத்து இருவர் உயிரிழப்பு!**

**தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு!**

**தீயில் எரிந்த மூதாட்டி பலி**

**மயங்கிச் சரிந்தவர் பலி**

விரிவுகள் :- பக். 11

# ஜனாதிபதி ரணிலுக்கு வினோ எம்.பி. ஆதரவு

கொழும்பு, செப். 19
ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு தனது ஆதரவை வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு 11

# தேர்தல் பரப்புரைகள் நேற்றுடன் ஓய்ந்தன!

கொழும்பு, செப். 19
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைப் பணிகள் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ளன.
நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் (இன்று முதல்) தேர்தல் பரப்புரைகள், பேரணி, துண்டுப் பிரசுர விநியோகம் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

# பிரபாகரனை உயிருடன் பிடித்திருக்கவேண்டும்!

## மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு


கொழும்பு, செப். 19
இறுதிக்கட்டப் போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுபிள்ளை பிரபாகரனை உயிருடன் பிடிக்கக்கூடியதாக இருந்திருந்தால் அது இன்னும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மஹிந்தராஜபக்சமேலும் தெரிவித்ததாவது:- 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசனை பிடுங்கியெறிந்து நோயாளியைக் கொல்லாதீர்

*நாட்டு மக்களிடம் ரணில் வேண்டுகோள்*



**கொழும்பு, செப். 19**

**கவலைக்கிடமான நிலையில் இருந்த நோயாளி அவசர சிகிச்சைக்குப் பின்னர் குணமடைந்து வரும் நிலையில், அந்த மருத்துவரை மாற்றி , தகுதியற்ற மருத்துவரின் கீழ் அனுமதிக்கும் தவறை நாட்டு மக்கள் செய்யக்கூடாது. ஒட்சிசன் குறைந்துவிட்டால், நோயாளிக்கு ஆபத்தே ஏற்படும்.**

- இவ்வாறு பத்தரமுல்லவில் இடம் பெற்ற அரசசேவை ஒன்றிணைந்த தாதியர் சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஆபத்தான நிலையில் இருந்த நாட்டின் பொருளாதாரம் இரண்டு வருடங்களில் மீண்டு வர முடியும் என எவரும் நினைக்கவில்லை. ஆனால் இலங்கையின் பொருளாதாரம் என்ற நோயாளிக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்குள் மக்களின் வாழ்க்கைச் சுமையை எளிதாக்கி நோயாளியை சாதாரண விடுதியில் அனுமதிக்கமுடியும் .

2026 இல் நாட்டை துரித அபிவிருத்திக்குக் கொண்டு செல்லும் வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதன் மூலம் நோயாளியை மருத்துவமனையிலிருந்து வெளியேற்றமுடியும்.

2022 இல் இந்த நாட்டின் பொருளாதாரத்தை சரிசெய்யமுடியாது என்று கூறியவர்களுக்கும், நாம் அதை செய்யவேண்டாமா? வரிகளைக் குறைப்பதன் மூலம் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்லமுடியாது. அப்போது வருமானம் குறையும். அப்போது ஒட்சிசன் குறைந்து விட்டால், நோயாளிக்கு ஆபத்து ஏற்படும்.

எனவே நோயாளி குணமடைந்து வரும் நிலையில், மருத்துவரை மாற்றி தகுதியற்ற வைத்தியரிடம் நோயாளியை ஒப்படைப்பதா என்பதை, இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும் - என்றார். (ச)



## தேர்தலின் பின் நடப்பது என்ன?

கொழும்பு, செப். 19
தாம் ஆதரவு வழங்கும் ஜனாதிபதி வேட்பாளருக்குத் தேர்தலில் பின்னடைவு ஏற்படும் பட்சத்தில் தமது அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் அரசியல் வாதிகள் ஆராய்ந்துவருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறும்பட்சத்தில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் உள்ள பெரும்பாலானவர்கள், ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் சாயக்கூடும். அவ்வாறு செய்தால் நாடாளுமன்றத் தேர்தலில் வெல்வதற்குரிய சாத்தியம் இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெல்லும் பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ள மொட்டுக் கட்சி உறுப்பினர்களின் அரசியல் எதிர்காலம் பற்றியும் கேள்வி எழுந்துள்ளது.

சிலவேளை சிறு வாக்கு வித்தியாசத்தில் தோல்வி ஏற்படும் பட்சத்தில் மேற்படி தரப்புகளுடன் இருப்பவர்கள் அதே கூட்டணியில்தான் நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கக்கூடும்.

அதேவேளை, அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெறும் பட்சத்தில் புது முகங்கள் பல நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் சூழ்நிலை இருப்பதால், தற்போதைய நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் வீடு செல்லக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-44)

## தோற்றோருக்கு மதிப்பளிப்போம்

*டலஸ் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 19
தோல்வியடையும் ஏனைய வேட்பாளர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் வெற்றியைக் கொண்டாடுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,
ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதியாகியுள்ளது. எனவே அந்த வெற்றியை ஆதரவாளர்கள் அமைதியாகக் கொண்டாட வேண்டும். தோல்வியடையும் வேட்பாளர்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் அந்த வெற்றிக் கொண்டாட்டங்கள் அமையவேண்டும். ஒழுக்கமான நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்- என்றார். (ச)

## காணி, பொலிஸ் அதிகாரம் மாகாணத்துக்குப் பகிரப்படாது

*தே.ம.சக்தி தெற்கில் தெரிவிப்பு*



கொழும்பு, செப். 19
மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்க மாட்டோமென தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பௌத்த காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நாங்கள் தற்போது உள்ளபடியே நடைமுறைப்படுத்துவோம், நாட்டின் இறைமையையும் சிங்கள கலாசாரத்தையும் பாதுகாப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)



## தனியார்துறையினரை நான் மறக்கமாட்டேன்

*சஜித் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 19
அனைவரும் மறந்து விட்டாலும் தனியார் துறையை நாம் மறப்பதில்லை. தனியார் துறை ஊழியர்களின் அடிப்படை சம்பளம் 25,000 ரூபாவாக வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். உங்களது உரிமைகளையும் நாம் பாதுகாப்போம்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

புதிய தொழிற்றுறைகளுக்கு முதலிடம் கொடுத்து ஒருமில்லியன் தொழில் முனைவோர்களை உருவாக்குவோம். இல்லத்தரசிகளை மையமாகக் கொண்ட சுயதொழில் புரட்சி ஒன்றை ஏற்படுத்துவோம்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்த திருடர்களை நீதிமன்றங்களிடமும் மக்களிடமும் பொறுப்புக் கூறுகின்ற நிலைக்கு கொண்டு வருவோம். திருடர்கள் திருடிய வளங்களை பெற்று மீண்டும் இந்த நாட்டில் முதலீடு செய்வோம். குறுகிய காலத்தில் மக்களை மேம்படுத்தி வறுமையில் இருந்து மீட்டெடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, செப்.19
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 38 வேட்பாளர்களில் 25 வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

ஒன்பது வேட்பாளர்கள் பாதுகாப்புக் கோரவில்லை எனவும், நான்கு வேட்பாளர்கள் பாதுகாப்பு வேண்டுமா, வேண்டாமா என்று அறிவிக்கவில்லை. பொலிஸ் தவிர்ந்த முப்படையினர், பொலிஸ் விசேட அதிரடிப்படை அல்லது சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## ராஜபக்ச அரசு குற்றமற்றது!

*நாமல் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 19
அரச சொத்துகளை நாங்கள் மோசடி செய்யவில்லை. குற்றச்சாட்டுகளை ஆதாரபூர்வமாக நிரூபித்து உலகில் எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தாலும் அதை எதிர்கொள்வோம். எம்மீதான குற்றச்சாட்டுகள் வெறும் அரசியல் சேறு பூசலாகும் .

-இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்கொண்ட சவால்களை இன்றும் எதிர் கொள்கிறோம். நாட்டுக்கு சிறந்த சேவையாற்றியதன் பின்னரே மக்களாணையை மீண்டும் கோருகிறோம்.

எம்மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றனகுற்றச்சாட்டுகளை நிரூபித்து உலகில் எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தாலும் அதனை எதிர்கொள்ளத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடம்பன் கொடியாக தமிழர்கள் திரள்வோம்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு அழைப்பு

**யாழ்ப்பாணம், செப். 19**

**வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் தன்னாட்சியை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டுவதற்கு தமிழ் மக்கள் அடம்பன் கொடியாய் மிடுக்குடன் அணிதிரளவேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் கிருஷ்ணர் ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல தசாப்தங்களாக தமது இருப்புக்கும் உரிமைக்கும் தமிழர்கள் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். முதுபெரும் இனமான தமிழினம், இத்தனை ஆண்டு காலமாக இலங்கை தேசத்தின் அரியாசன அதிகாரத்துக்கு அயலவரை தெரிவுசெய்து எதனையுமே அடைந்திடாத ஏமாற்றத்தினால் அலுத்துப்போய் இருக்கிறது. பன்னாட்டு பலத்தின் ஊடே நிர்மூலமாக்கப்பட்டது தான் தமிழினத்தின் இதுநாள் வரலாறு. இப்போது, சற்று நின்று நிதானித்து சிந்தித்து செயலாற்றும் முக்கியமான தருணம். இத்தருணத்தில் ஒரு பூர்வீக வரலாற்றைக் கொண்ட மக்கள் இனம் என்ற வகையில் தமிழினம் அடம்பன் கொடியாய் திரண்டு ஒற்றுமையை உலகுக்கு உணர்த்துவோம் - என்றார். (ச-20,27)



## பல்கலை மாணவர்கள் வாக்களிக்க விடுமுறை

கொழும்பு, செப்.19

ஜனாதிபதித் தேர்தலில் பல்கலைக்கழகங்களின் பணியாட் குழுவினர் மற்றும் மாணவர்கள் வாக்களிப்பை இலகுவாக்கும் வகையில் விடுமுறை அளிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய விடுமுறை தொடர்பான அறிவித்தலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (ச)

## தேர்தல் பதற்றம் தேவையில்லை

கொழும்பு, செப். 19

ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்புக்குப் பின்னரான வன்முறைகள் குறித்து பதற்றமடைவதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்துப் பிரஜைகளும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வது தேர்தல் வேட்பாளர்களின் கௌரவத்துக்கும் தேர்தல் நடைமுறைக்கும் அவசியமான விடயம். தேர்தல் வன்முறைகள் இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. வன்முறைகள், அமைதியின்மை குறித்த தகவல்களை எச்சரிக்கையுடன் கையாள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## தேர்தல் விதிமீறல் அழையுங்கள்!



கொழும்பு, செப். 19

தேர்தல் விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து முறைப்பாடு செய்ய விசேட தொலைபேசி இலக்கங்களை தேர்தல்கள் சிக்கல்களைத் தீர்க்கும் பிரிவு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம், வாக்குப்பதிவின் போது இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து பொதுமக்கள் முறைப்பாடு அளிக்கமுடியும்.

அதற்கிணங்க 011 2796546, 011 2796549, 011 2796589,

011 2868153 எண்களுக்கும் பொலிஸ் பிரிவுக்கு 011 2796536, 011 2796540, 011 2796544 ஆகிய எண்களுக்கும் அழைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இல்யாஸின் வாக்கு நிராகரிக்கப்படும்!

கொழும்பு, செப். 19

உயிரிழந்த ஜனாதிபதி வேட்பாளரான அய்துரூஸ் முஹம்மது இல்யாஸின் வாக்குகள் நிராகரிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் எம்.பி. மருத்துவர் அய்துரூஸ் முஹம்மது இல்யாஸ் கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி காலமானார். அவரின் இடத்துக்கு புதியதொரு ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்கவில்லை. இந்நிலையில் வாக்குச்சீட்டுகளில் காணப்படும் உயிரிழந்த ஜனாதிபதி வேட்பாளரின் பெயருக்கு வாக்களிக்கப்பட்டால் அந்த வாக்கு நிராகரிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-6)



## கப்பம் வசூலித்த பொலிஸார் கைது

கொழும்பு, செப். 19

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் சிலரை அச்சுறுத்தி பணம் வசூலிக்க முற்பட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஒரு புலனாய்வுப்பிரிவு உத்தியோகத்தரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் குடியிருப்பாளர்களிடமிருந்து பதினைந்து இலட்சம் ரூபாவைக் கோரினர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-6)




**ம**ழைவிட்டும் தூவானம் விடாத மாதிரி, எலக்சன் பிரசாரங்கள் நேற்றையோட ஓய்ஞ்சாலும் பேஸ்புக்கில இன்னும் களைகட்டினபடிதான் இருக்குது. அதிலையும் வேட்பாளர்மாரின்ர வால்பிடியளின்ர பேஸ்புக் சண்டையள் தான் கண்கொள்ளாக் காட்சியா இருக்குது. ஒவ்வொருத்தரும் தாங்கள் ஆதரிக்கிற வேட்பாளர்மாரின்ர கூட்டப்படங்களையும், வீடியோக்களையும் போட்டு "இந்தக்கூட்டம் காணுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?" எண்டு எழுப்பம் காட்டுகினம். அதில பகிடி என்னெண்டால் அவையள் போடுற கூட்டப் படங்கள் எல்லாத்திலையுமே சனங்கள் திரளா வந்து இருக்கிறதுதான். எல்லாக் கூட்டங்களுக்கும் எப்பிடி இப்பிடி எங்கட சனங்கள் அள்ளுப்பட்டுக் கொண்டு போகுதுகள்? எண்ட டவுட் கனபேருக்கு இருக்கும். அப்பிடி எங்கட சனங்களுக்கு திடீரெண்டு அரசியல் உணர்ச்சி பெருக்கெடுத்து ஆறா ஓடுறதாலதான் இப்பிடிக் கடல் மாதிரி கூடுகினமோ எண்டும் யோசிச்சிருப்பியள். ஆனால் அந்தக் கோதாரி ஒண்டுமில்லை. எல்லாம் சாப்பாட்டுப் பார்சலும், காசும் செய்யிற மாயம் தான்.

இப்பிடிக் கூட்டத்துக்கு ஆக்களைக் கொண்டாறதையே சிலர் இப்ப தொழிலா வைச்சிருக்கினம். கூட்டத்துக்கு வாற ஆக்களுக்கு ரண்டாயிரமும், சாப்பாடும் எண்டுதான் பேச்சு. ஆனால் அதில ஆக்களைக் கூட்டிக்கொண்டு வாறதுக்கெண்டு கட்சியால பொறுப்புக்குடுக்கப்பட்ட ஆள், ஆளுக்கு 500 ரூபாப்படி தன்ர பொக்கெற்றுக்குள்ள போட்டிடுவார். ஒரு கூட்டத்துக்கு ஆயிரம் பேர் வந்தால், அந்தப் பொறுப்பாளருக்கு 5 லட்சம் மிஞ்சும். அவையும் இந்த நேரத்திலதானே உழைக்கலாம். ஆனால் சனத்துக்குத்தான் 500 ரூபா வெட்டுப்படும். சில கட்சியளுக்கு தங்கட கூட்டங்களுக்கு சனங்களே வராது எண்டு தெரியும். அதால வெளிமாவட்டங்களில இருந்தும் ஆக்களை இறக்கி இருக்கினம். இப்பிடி காசுக்கு வாற ஆக்களை 'சேவல்' எண்டு செல்லமா சொல்லுகினம். ரெலிபோன்காரரின்ர யாழ்ப்பாணக் கூட்டங்களுக்கு இப்பிடி நூற்றுக்கணக்கில வெளிமாவட்டச் சேவல்களை பஸ்களில அடைஞ்சு கொண்டந்திருக்கினம். தூர இடத்தில இருந்து வந்ததால எல்லாச் சேவல்களுக்கும் போகேக்க, சாப்பாடு காசோட தண்ணியும் காட்டித்தான் அனுப்பி இருக்கினம். இதில இன்னொரு பகிடியும் இருக்குது முதல் நாள் சிலிண்டர் கூட்டத்துக்கு போன அதே சேவல்கள், அடுத்தநாள் ரெலிபோன்ர கூட்டத்துக்கும் போயிருக்கினமாம். அப்ப கீழ ஒரே ஆக்கள் தான் கதிரையை நிரப்புகினம். மேடையில இருக்கிற ஆக்கள் தான் மாறிக்கொண்டிருக்கினம்.

இப்பிடிச் சேவல்களைக் கொண்டந்து கதிரையளை நிரப்பிப் போட்டு, பிறகு "உங்கட கூட்டத்தை விட எங்கட கூட்டத்துக்குச் சனம் கூட" எண்டு லெவல் கதையள் வேற. ஆனாலும் வால்பிடியளுக்கு உள்ளுக்க நடக்கிற இந்தச் சாப்பாட்டுப்பார்சல் விளையாட்டோ, தண்ணி காட்டுற படலமோ, காசு கைமாறுற சங்கதியோ தெரியாது தான். எல்லாமே மேல்மட்டக்காரரோட விசயத்தை முடிச்சுப் போடுவினம். இதையெல்லாம் தெரியாமல் வால்பிடியள் மற்றக்கட்சிக்காரரோட உறண்டை இழுத்துக்கொண்டு திரியுதுகள். உண்மையில இந்த வால்பிடியள் தான் பரிதாபத்துக்குரிய ஜீவன்கள்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா யக்ஞம்

யாழ்ப்பாணம், செப்.19

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் நேரடி வழிகாட்டலில் வாழும் வேத விற்பன்னர் ஸ்ரீ வேத நாராயண் நடத்தி வைக்கும் மூன்றாவது காயத்திரி மஹா மந்திர மஹா யக்ஞம் நிகழ்வு யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள யாழ். மத்தி. ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். (ச-45)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தகவல் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். ஆதாயம் கிடைக்கும். சில செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வ வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். நல்ல தகவல் கிடைக்கக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். கூடுதல் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். செலவுகளால் கையிருப்பு கரையும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். இலாபம் கிடைப்பது மகிழ்ச்சி தரும். தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். செலவு செய்ய நேரிடும். முருகப்பெருமான் வழிபாடு நன்று.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற் கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மனவருத்தங்கள் நீங்கும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படும். கொடுத்த கடன் தொகை திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

# மருந்தடித்த மாம்பழங்கள் அதிகளவில் விற்பனை

## நுகர்வோர் புலம்பல்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் இரசாயன மருந்து விசிறப்பட்டு பழுக்கவைத்த மாம்பழங்களே அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. அதனை உண்பதால் நோய்த் தாக்கங்கள் ஏற்படும் என நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பருவகாலத்துக்கேற்ப மாம்பழங்கள் அதிகளவில் சந்தைகளுக்கு கொண்டுவரப் படுகின்றன. அதனால் அவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது.

வியாபார நோக்கம் கருதி செயற்கை முறையில் இரசாயன மருந்து தெளித்து பழுக்கவைத்த மாம்பழங்களே அதிகளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

எனவே இந்த விடயத்தில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் அக்கறை செலுத்தி மருந்தடித்த பழங்களை விற்பனையிலிருந்து நீக்க வேண்டும் என்றும் நுகர்வோர் மேலும் சுட்டிக்காட்டினர். (ச-17)



நீர்வேலி தெற்கு ஸ்ரீ முருகையன் கோவிலின் மண்டலாபிஷேகப் பூர்த்தியும், சங்காபிஷேகமும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-45-17)

## சுற்றுலாப் பயணிகள் வடக்குக்கு வருகை

யாழ்ப்பாணம், செப். 19

நீண்டகால விடுமுறை நாள்களைப் பயன்படுத்தி தெற்கிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வடக்குக்கு வருகை தந்துள்ளனர்.

நல்லூர், நயினாதீவு, காங்கேசன்துறை, கீரிமலை உட்பட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்வையிட்டுள்ளனர். அதே வேளை சுற்றுலாவிகளின் வருகையால் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் நுகர்வில் பெரும் கிராக்கி நிலவியது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)



தேர்தல் கண்காணிப்பு 'கபே' நிறுவனத்தால் புதிய வாக்காளர்களுக்கான வாக்களிக்கும் முறை மற்றும் தேர்தல் சட்டங்கள் தொடர்பான கருத்துரை நிகழ்வு யாழ். தொழில்நுட்பக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது 'கபே' நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் சி.தினேஷ் வளவாளராகக் கலந்துகொண்டார். (ச-20,27)



உரும்பிராய் ஞான வைரவ சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற முழு நிலாக் கலந்துரையாடலில் உரும்பிராயைச் சேர்ந்த ச.விவேகானந்தனால் ஒரு தொகுதி ஆங்கிலப் புத்தகங்கள் நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன. (ச-45)

**மஹிந்திரா ஐடியல் பினான்ஸ்**

## சுன்னாகம் கிளை ஆண்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 19

மஹிந்திரா ஐடியல் பினான்ஸ் சுன்னாகம் கிளையின் 3ஆம் ஆண்டு நிகழ்வு இன்று 19ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளையின் முகாமையாளர் த.சுகந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் உதவிப் பொதுமுகாமையாளர் (அடகுப்பிரிவு) பிரதீப் டி சில்வா, உதவி பொது முகாமையாளர் (மனிதவளம்) விஸ்மித் காரியவசம் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாக்கு என்னும் ஆயுதம்

இலங்கையின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் களம் கடந்த காலங்களை விடவும் வித்தியாசமானது. கடந்த தேர்தல்களில் தெற்கில் இருந்து களமிறங்கிய வேட்பாளர்களில் ஒருவரையே தெரிந்தெடுக்க வேண்டிய நிலைமை தமிழ் மக்களுக்கு இருந்தது. கடந்த காலங்களில் தெற்கு அரசியல் தலைவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நம்பி தங்கள் வாக்குகளை வழங்கிய தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டனர். பல தசாப்தங்களாக நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு முதல், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட நகர்வுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் எனப் பல பிரச்சினைகள் இன்னமும் தீர்வின்றி நீண்டுகொண்டே இருக்கின்றன.

தெற்கு அரசியல் தலைமைகள் நடத்தும் ஏமாற்று நாடகத்தை சர்வதேசத்துக்கு உணர்த்தவும், தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தவும் இம்முறை தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற நகர்வுக்கு அவசியம் ஏற்பட்டது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒரே குரலாக தமிழர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தவே பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கரு உருவாக்கப்பட்டது. பொது வேட்பாளர் என்ற விடயத்தில் கட்சி அரசியல் முதன்மைப்படுத்தப்படவில்லை. தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆயினும் சிறு குழுக்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொதுவேட்பாளர் என்ற நகர்வை எதிர்க்கின்றன. இலங்கைத் தமிழரசுக் கட்சியில் பெரும்பாலோனோர் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை ஆதரிக்கின்றனர். ஆனால் சிறு குழு தன்னிச்சையாக தங்களின் ஆதரவை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு தெரிவித்ததோடு, அதையே தமிழரசுக் கட்சியின் தீர்மானமாகத் திசை மாற்ற முயற்சிக்கின்றது. கட்சியின் இப்போதைய தலைவர் மாவை சேனாதிராசா, தெரிவுநிலைத் தலைவர் சிறீதரன் உள்ளிட்ட பலரும் பொதுவேட்பாளர் பக்கமே நிற்கின்றனர். பொதுவேட்பாளருக்காகப் பகிரங்கமாக பரப்புரையும் செய்கின்றனர். தமிழரசின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தி கொண்டவர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் பொதுவேட்பாளரின் பக்கம் நிற்கையில், கட்சியைச் சிதைப்பதற்காக நீதிமன்றில் வழக்குத் தொடுத்த அணியினரே சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிக்கை விடுகின்றனர். சிலவேளைகளில் இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, தமக்கு எதிரானவர்களை தன்னிச்சையாக கட்சியை விட்டு தூக்கிவிட்டு, தமது கையைவிட்டுப்போன தமிழரசின் தலைமைப்பதவியை குறுக்கு வழியில் பிடிக்கலாம் என சிலர் சதியாட்டம் ஆடுகின்றனரோ என்ற சந்தேகமும் மக்களிடம் துளிர் விட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளை ஆராய்ந்து முடிவெடுப்பது என்றே இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருந்தது. ஆனால் தெற்கு அரசியல் தலைவர்கள், ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இதயசுத்தியுடன் அணுகவில்லை. அவ்வாறு இருக்கையில் அவர்களுக்கு எந்த அடிப்படையில் ஆதரவு வழங்குவது? சஜித் பிரேமதாஸவுக்கு என்ன அடிப்படையில் ஆதரவு தெரிவிப்பது?

தமிழ் மக்கள் தற்போதைய நிலைமையை விளங்கிக் கொள்ளவேண்டும். எமக்குக் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் ஒற்றுமையாக, ஒரே குரலாக எமது அபிலாஷைகளை வெளிப்படுத்தவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்தால் மட்டுமே, இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்கினால் மட்டுமே தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதை தெற்கின் முகத்தில் அறைந்து கூறக்கூடிய காலம் இப்போது கனிந்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தம் உரிமைக்கான குரலை முழங்கிட, வாக்கெனும் ஆயுதத்தை ஒற்றுமையாகப் பிரயோகித்தால், அதைவிட கனதியான வேறு செய்தி ஏதுமில்லை.




# இனி பிரசாரம் செய்தால் சட்டநடவடிக்கை

கொழும்பு, செப்.19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் காலம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துள்ள நிலையில், குறித்த காலக்கெடுவுக்குப் பின்னர் சட்டவிரோத பிரசாரத்தில் ஈடுபடுவோர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குப் பின்னரும் எந்தவொரு தனிநபரோ அல்லது குழுவோ வேட்பாளர்களை பிரசாரம் செய்வது அல்லது ஊக்குவிப்பது தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும். நியாயமான மற்றும் சுதந்திரமான தேர்தல் நடைமுறையை உறுதி செய்வதற்காக கடுமையான விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன.

பிரசார காலம் முடிவடைந்தவுடன், பொதுப் பேரணிகள், விளம்பரப் பொருள்கள் விநியோகம் அல்லது வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்வது அனுமதிக்கப்படாது. குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு எந்தவொரு பிரசாரத்துக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்றார். (ச)

## ஒருநாளில் 156 முறைப்பாடுகள்

கொழும்பு, செப்.19

கடந்த 24 மணி நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 156 முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், ஜூலை 31ஆம் திகதியில் இருந்து செப்ரெம்பர் 17 ஆம் திகதி வரை 4, 737 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## ரணிலுக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், செப்.19

நடைபெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக யாழ். மாவட்டக் கிராமிய கடற்றொழில் அமைப்புகள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இந்த ஆதரவு வெளிப்படுத்தப்பட்டது. (ச-45-27)

## இலங்கை மீனவர்கள் தமிழ்நாட்டில் கைது

கொழும்பு, செப்.19

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கடற்றொழிலாளர்கள் மூவர் எல்லை தாண்டிய குற்றத்துக்காக இந்திய கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்களிடம் நடத்திய முதல் கட்ட விசாரணையில் காற்றின் வேகம் காரணமாக படகு திசை மாறி இந்திய கடற்பரப்புக்குள் வந்ததாக தெரிவித்துள்ளனர். (ச)

## பிணையில் கஜேந்திரன்

யாழ்ப்பாணம், செப்.19

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்புச் செய்யுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பரப்புரையில் ஈடுபட்டதையடுத்து பரப்புரையில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட சிலரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நீதிமன்றத்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அவர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியபோது அவர்களது சட்டத்தரணிகள், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதும் புறக்கணிக்கக் கோருவதும் சட்டவிரோதம் ஆகாது என்று நீதிமன்றில் வாதிட்டனர். அதன்பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் ஏனையவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ச-27)

## நாளை

20.09.2024

வெள்ளிக்கிழமை - புரட்டாதி - 04

சுபநேரம் : 07.33 - 09.03

ராகுகாலம் : 01.33 - 03.03

## நாளொரு நல்வார்த்தை

ஒரு நாடு தன்னகத்தே கொண்டுள்ள மிகப்பெரிய சொத்து ஆரோக்கியமான குடிமக்களே...!

- வின்ஸ்டன் சேர்ச்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர மாயவன் சமுத்திரத் தீர்த்தம்



வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி வல்லிபுரம் ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்த உற்சவம் நேற்றுமுன்தினம் மாலை சிறப்பாக இடம்பெற்றது.

மாலை 5:14 மணியளவில் வல்லிபுரத்து ஆழ்வார் ஆஞ்சநேயர் முன்னேவர தொடர்ந்து விநாயகரும் அவரை தொடர்ந்து மகாலக்சுமியும் தொடர்ந்து வர வல்லிபுரத்து சக்கரத்து ஆழ்வார் கற்கோவளம் கடற்கரையில் பல்லாயிரம் அடியவர்கள் சூழ சமுத்திரத் தீர்த்தமாடினார். இதன்போது பல அடியார்கள் தூக்குக் காவடி, பால்க்காவடி, அங்க பிரதஸ்டை, பால்குடம் போன்ற பல்வேறு நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றினர். (ச-27)


## கேள்விஅறிவித்தல்
## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## சபைநிதி 2024

1. கரைதுறைப்பற்று பிரதேசசபையானது. சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

2. **தலைவர், பெறுகைக்குழு. உள்ளூர் அதிகார பெறுகைசபை, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி, கட்டுமானம் மற்றும் கட்டட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

5. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை. முல்லைத்தீவு. தொலைபேசி:-024-3243542 தெலைநகல்: 0212290001.**ல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 19.09.2024ம் திகதியிலிருந்து 01.10.2024 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.30 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 19.09.2024ம் திகதியிலிருந்து 01.10.2024 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை. முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 02.10.2024ம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது–19.Nov.2024) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(1)/02/03/DE.RE/Capital/01/2024 | Construction Of Boundary Wall For Mullaitivu Public Playground | 1.059 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 20,000.00 | 17/Dec/2024 |
| 2 | NP/14/44(1)/02/03/DE.RE/Capital/05/2024 | Renovation Of Shopping Complex Mullaitivu Bus Stand, | 1.101 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 20,000.00 | 17/Dec/2024 |
| 3 | NP/14/44(1)/02/03/DE.RE/Capital/02/2024. | Construction of Welcome Board at Maritimeattu Pradeshiya Sabha Borders (5) | 1.080 | 49 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 20,000.00 | 17/Dec/2024 |
| 4 | NP/14/44(1)/02/03/C.F/Capital/02/2024 | Renovation of (Gravel) Palmyrah murugan Kovil Link Road Stage 2 at Mulliwaikkal West | 0.271 | 49 நாட்கள் | C9 and C8 (வீதி) | 5000.00 | 17/Dec/2024 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 27.09.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ. மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.**
**19.09.2024**

(CR/43247) J-1




வவுனியாவில்

# 9,000 சுவரொட்டிகள் பொலிஸாரால் நீக்கம்

வவுனியா, செப்.19

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இறுதிப் பிரசாரத்துக்கான நாள் நேற்று புதன்கிழமையிலிருந்து நிறைவடைவதால், தேர்தல் மற்றும் வேட்பாளர்கள் தொடர்பான பாதைகள் மற்றும் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துவது தேர்தல் சட்டவிதிமுறைமீறல் என இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது

அதனடிப்படையில் வவுனியாவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை வவுனியா பொலிஸார் நேற்று நீக்கினர். வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக் கொடி தலைமையிலான 20க்கும் மேற்பட்ட பொலிஸார் குறித்த பணியில் ஈடுபட்டுள்ளனர்.

(ச-45-18-110)

# வாக்குரிமையே மக்களின் புரட்சி

யாழ்ப்பாணம், செப். 19

மக்கள் புரட்சி வெடிக்கட்டும் எனக் கூறி தன்னுடலை ஆகுதியாக்கிய தியாகி திலீபன் அவர்களின் நினைவேந்தல் நாளில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் வரலாற்றுச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாக்கினூடாக புரட்சி செய்யவேண்டும்.

-இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ந.பொன்ராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கான வரலாற்றுச் சந்தர்ப்பம். இதை மக்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும்.

தமிழர் தாயகத்தில் உள்ள மக்கள் கத்தியின்றி, இரத்தம் சிந்தாமல் மாபெரும் மக்கள் புரட்சி ஒன்றுக்குத் தயாராக வேண்டும்.

சிங்கள தேசத்தின் நிதியில், தமிழர் தேசத்தின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக இந்தத் தேர்தல் அமையப்போகின்றது.

இந்த மக்கள் புரட்சி வெடிப்பதன் மூலமே தமிழினத்துக்கு விடுதலை கிடைக்கும் எனக் கூறி தன்னை ஆகுதியாக்கிய தியாகி திலீபனை அஞ்சலிப்பதாக அமையும். வாக்களித்து மாபெரும் மக்கள் புரட்சி ஒன்றை வெளிப்படுத்துவோம் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நேயமுள்ள அரசு அமையும்

## அநுர தெரிவிப்பு

**கொழும்பு, செப். 19**

**இந்த அரசியலில் ஓர் அசிங்கமான சூதாட்டம் நிலவுகின்றது. அங்குமிங்கும் தாவிக்கொண்டிருக்கிறார்கள். அங்கும் வாங்கிக்கொள்கிறார்கள். இங்கும் வாங்கிக்கொள்கிறார்கள். எனவே நாட்டைச் சீராக்குகின்ற உண்மையான மக்கள் நேயமுள்ள அரசாங்கமொன்றை நாங்கள் இந்த நாட்டில் கட்டியெழுப்புவோம்.**

-இவ்வாறு சாய்ந்தமருதில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல கலாசாரங்களைக் கொண்ட மக்கள் வசிக்கின்ற நாடே எமது நாடு. அதனால் இந்த நாட்டின் எதிர்காலம் இந்த பல்வகைமை கொண்ட மக்கட்குழுக்கள் மத்தியில் ஒற்றுமை நிலவினால் மாத்திரமே நிலைத்திருக்கும்.

அதனால் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி உங்களின் மதத்தை பின்பற்றுவதற்கான உரிமையை, மொழியைப் பேசுவதற்கான உரிமையை வழங்குகின்ற ஆட்சியாகும். உங்கள் கலாசார அடையாளத்தை ஏற்றுக்கொண்டு சுதந்திரமான நாட்டை உருவாக்குவதுதான் தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பு .

அசிங்கமான அரசியல் காரணமாகவே எமது நாடு நாசமாகியது. எமது நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும், உண்மையான மக்கள் நேயமுள்ள அரசாங்கமொன்றை நாங்கள் இந்த நாட்டில் கட்டியெழுப்புவோம்- என்றார். (ச)


## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில் வே.நிருஷன் (200225100270) என்பவரது தேசிய அடையாள அட்டை, வாகனசாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 498 0418**

## விற்பனைக்கு

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தில் கடற்கரை முகப்புடன் கூடிய 10 ஏக்கர் (160 பரப்பு) காணியில் அமைந்த மாடி வீடும், நன்னீர்க் கிணறும், 1500 இற்கும் மேற்பட்ட தென்னங் கன்றுகளுடன் மின்சார வசதியுடன் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புக்கு: 0777 23 25 35**

## GSc Geo Science Hall

### ஜியோ சயன்ஸ் ஹோல் (சாவகச்சேரி)

**க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களுக்கென சிறந்த அனுபவமிக்க ஆசிரியர் குழாமோடு**

### A/L கலைப்பிரிவு

தமிழ் - இரா. அகிலன் BA (Hons), M phil
புவியியல் - எஸ். துஷாந்த் BA (Hons), MA
இந்துநாகரிகம் - ஜெ.ஜெசிந்தன் BA (Hons), spl
அரசறிவியல் - த. வைஷ்ணவன் BA (Hons), MA
வரலாறு - திரு.சுஜிகரன் (Paper class) BA (Hons), MA , PGDE
- எஸ்.துஷாந்த் BA (Hons), MA

சாவகச்சேரி நகரில் புதிய ஆரம்பம்

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

Call -077-9848966

A9 வீதி சங்கத்தானை சாவகச்சேரி


# கடலுணவுகளின் விலை அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் கடலுணவுகளின் விலை என்றுமில்லாத அளவு அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர். கடலுணவுகளின் பிடிபாடு குறைந்து காணப்படுவதாலேயே சந்தைக்கு மீன்கள் எடுத்துவருவது குறைவடைந்துள்ளது. கொட்டடி, குருநகர், நாவாந்துறை, பாஷையூர், கல்வியங்காடு போன்ற மீன் சந்தைகளில் கடலுணவுகளுக்கு பற்றாக்குறை நிலவுவதோடு, விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடலுணவுகள் யாவும் கிலோ ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் தெரிவித்தனர். (ச-45-17)


## பெயர் மாற்றம்

உயரப்புலம், ஆனைக்கோட்டையில் வசிக்கும் **பிரான்சிஸ் றோசம்மா** ஆகிய நான் எனது பெயரை **பிரான்சிஸ் திரேசம்மா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பிரான்சிஸ் திரேசம்மா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/56248) J-1

**பிரான்சிஸ் திரேசம்மா**

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

### பொது அறிவித்தல்

### 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் பொருட்டு சபை எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளுக்கான முன்மொழிவுகள் பொதுமக்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புகளிடமிருந்து கோரப்படுகின்றன. எனவே மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகளின் முன்மொழிவுகளை எதிர்வரும் 2024.10.05 ஆம் திகதிக்கு முன்னர் சபையின் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்க முடியும் என்பதை அறியத்தருகின்றேன்.

தொலைபேசி :- 021 225 6647
அஞ்சல் :- வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
யாழ் - காரைநகர் வீதி, மானிப்பாய்
மின்னஞ்சல் :- vswps@yahoo.com

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(SR/43248) J-1

## Mora Exams

Faculty of Engineering University of Moratuwa

**மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள்நடாத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 15வது**

### முன்னோடிப் பரீட்சை 2024

மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்களால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வருடாந்த முன்னோடிப் பரீட்சை இம் முறையும் சிறப்பாக இடம்பெறவுள்ளது. தமிழ், ஆங்கில மொழிகளில் கணித மற்றும் உயிரியல் பிரிவுகளில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. கடந்த 14 வருடங்களாக நடைபெற்றுவரும் இந்தப்பரீட்சையில் தோற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துள்ளது. விடைத்தாள்கள் யாவும் சிறந்த முறையில் திருத்தப்பட்டு Z-புள்ளிகள், மாவட்ட, தேசிய நிலைகளுடனான பெறுபேறுகள் 23.10.2024 க்கு முன்னர் வெளியிடப்படும். மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சை தொடர்பான அனுபவத்தை வழங்கி அவர்களின் நிலையை அறிந்து கொள்வதே இப்பரீட்சையின் நோக்கமாகும். கடந்த வருடங்களில் இப்பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றுகொண்டவர்கள் இறுதிப் பரீட்சையிலும் முன்னணி நிலைகளை அடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

| DATE | TIME | SUBJECT |
|---|---|---|
| 28/09/2024 Saturday | 1:30 P.M - 4:40 P.M | Combined Mathematics I |
| | 1:30 P.M - 3:30 P.M | Biology I |
| 29/09/2024 Sunday | 1:30 P.M - 4:40 P.M | Combined Mathematics II |
| | 1:30 P.M - 4:40 P.M | Biology II |
| 05/10/2024 Saturday | 1:30 P.M - 3:30 P.M | Physics I |
| 06/10/2024 Sunday | 1:30 P.M - 4:40 P.M | Physics II |
| 12/10/2024 Saturday | 1:30 P.M - 3:30 P.M | Chemistry I |
| | 1:30 P.M - 3:30 P.M | ICT I |
| 13/10/2024 Sunday | 1:30 P.M - 4:40 P.M | Chemistry II |
| | 1:30 P.M - 4:40 P.M | ICT II |

Online application form

examsmora@gmail.com
moraexams.org/en/
0778435612

Our platinum sponser NORTHERN UNI
Media Sponser உதயன்
Our gold sponser Northway Family Mart


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 62ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்

மலர்வு
19 . 09 . 1962

உதிர்வு
01 . 10 . 2023



**அமரர் சின்னத்துரை சிறிஸ்கந்தராஜா**

திதி : 19.09.2024

அன்பான எங்கள் தம்பியே
அமரராய் விண்ணடைந்து
ஆண்டொன்று சென்றதிங்கே
அவனியிலே நாம் வாழும் காலம் வரை
அழியாது உம் நினைவு எம்மை விட்டு
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

உம் பிரிவால் துயருறும்
அக்காமார்

(CS/56243) J-1

# 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 12 . 1948

மறைவு
19 . 09 . 2000



**அமரர் அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா**

ஆண்டுகள் இருபத்து நான்கு சென்றாலும்
என்றும் மறவாது நாங்கள் வான்வீட்டில்
இருக்கும் உங்கள் பரிந்துரையுடன்
இப் பாரினில் நீர் காட்டிய பாதையில்
சீரும் சிறப்பாக பயணிக்கிறோம் நன்றி தந்தையே

உமது பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்!

02, இராசாவின் தோட்ட
ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## இளநீருக்கு கிராக்கி

தற்போது நிலவும் வறட்சியான காலநிலையை அடுத்து செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாக நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கில் இருந்து இளநீர் வடக்குக்கு எடுத்து வரப்படுவதும் குறைந்துள்ளது.

செவ்விளநீரின் நுகர்வு அதிகரித்துக் காணப்படுவதால் அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது. (ச-17)

# நெஞ்சை விட்டகலா மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் ஆலாலசுந்தரம் முருகானந்தன்**



எங்கள் அன்புத் தெய்வம் அப்பாவே!
நொடிப்பொழுதில் எமை
நோகவிட்டு சென்றுவிட்டீர்கள்..
சுவாசிக்க சுவாசம் இல்லை நேசிக்க யாரும் இல்லை..
நெஞ்சம் எல்லாம் வலிகளுடன்
நிஜங்களைத் தேடுகின்றோம் அப்பா!
நிஜம் தானா என்று எண்ணி நித்தமும்
தவிக்கின்றோம் அப்பா!
வானில் சிந்திடும் துளியில் மண்ணில்
பயிர்கள் துளிர்விடும்
எங்கள் விழிகள் சிந்திடும் துளியின் வழியில்
உங்களை கண்டிட முடியாதோ..
மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில் என்றென்றும் நிறைந்திருக்கும்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் அப்பா..!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தோற்றம்
18.06.1967

மறைவு
22.09.2021

திதி: அபரபக்க துதியை

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 20.08.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**சின்னத்துரை விநாயகமூர்த்தி (வைத்திலிங்கம்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி வீதி, நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
தொ.பே: 021 223 1088, 077 484 6660

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வு அழைப்பிதழ்

இரங்கல் உளமுடையீர்!



எங்கள் அன்புநிறை குடும்பத் தலைவி

**திருமதி தெய்வா கந்தசாமி** (சுகாதார உதவியாளர்)

அவர்களின்
வாழ்வு நிறைந்து இயற்கையுடன் கலந்த
31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு
இன்று (19.09.2024) வியாழக் கிழமை மு.ப. 11.00 மணியளவில்
சாமியன் அரசடிச் சந்தி. கரவெட்டியிலுள்ள
தேவா மணிமண்டபத்தில் நடைபெறும்.
இந்நிகழ்விற் கலந்து
தெய்வா நினைவாக வழங்கப்படும் நண்பகல் உணவினையும் ஏற்று
எம்மைத் தேற்றிச் செல்லுமாறு வேண்டி அழைக்கிறோம்.
நன்றி

நிரந்தர முகவரி:
"பெரிய தாய் அகம்",
இடைக்குறிச்சி, வரணி

தகவல்
குடும்பத்தினர்

தற்காலிக முகவரி:
மரக்காலை ஒழுங்கை,
சாமியன் அரசடி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்குக்கு சோரம்போவோருக்கு வாக்குப்பலத்தைக் காட்டுவோம்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 19**

**தென்னிலங்கை அரசியல்வாதிக்கு ஆதரவு தெரிவித்து பிரசாரம் செய்து வரும் தமிழ் அரசியல்வாதிகள் ஆளுநர் பதவிக்கும் அமைச்சர் பதவிக்கும் தமிழ் மக்களை விலை பேசி விடமுடியாது.**

- இவ்வாறு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை தொகுதிக் கிளை ஏற்பாடு செய்த பொதுவேட்பாளர் ஆதரவுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு தேர்தல்கள் வருகிறபொழுது நாங்கள் சொல்லுகின்ற வார்த்தைகள் தேர்தல் முடிவுற்றதும் எங்களுக்கு ஒரு பயனையும் தரவில்லை. யுத்தம் முடிவுக்கு வந்த பிற்பாடு இந்த மண்ணிலே நடக்கிற ஒவ்வொரு தேர்தல்களையும் ஒரு போர்க்களமாகப் பார்க்கிறோம் .

21 ஆம் திகதி வாக்குச்சீட்டுகள் தான் உங்களுடைய அந்த மிகப் பெரிய ஆயுதம். அதனை நாங்கள் இனத்துக்காகப் பயன்படுத்துகிறோமா அல்லது பணத்துக்காகப் பயன்படுத்தப்போகிறோமா?

தமிழ் மக்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கப் போகிறார்கள் என்ற பயத்தினாலேயே கடைசி நேரத்திலும் கூட தெற்கு அரசியல்வாதிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகிறார்கள் .

அவர்களுக்கு பின்னால் தமிழரசியல்வாதிகள் சிலர் பதவிகளுக்காக பேரம் பேசிக்கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

எனவே எமது வாக்குகள் தெற்குக்கு மட்டும் அல்ல பதவிக்கும் பணத்துக்கும் விலை போகும் தமிழரசியல்வாதிகளுக்கும் ஓர் எடுத்துக் காட்டாக அமையவேண்டும் - என்றார். (ச-125)

### மக்களுக்கான...

நாங்கள் நீண்டகாலமாக மேற்கொண்ட முயற்சிகளின் பெறுபேறுகள் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி உறுதியாகின்றது. தோட்டங்களில் வசிக்கின்றவர்களின் வாழ்க்கை பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்களுக்கு வசிக்க பொருத்தமான வீடு கிடையாது. சரியான கழிப்பறை வசதிகள் கிடையாது. தோட்டத்திற்குச் செல்ல சரியான பாதை கிடையாது. பிள்ளைகளுக்குக் கல்வி வசதி கிடையாது. உங்கள் பிள்ளைகளுக்குச் சரியான ஒருவேளை உணவு கிடையாது. மருந்து வாங்கிட வழியில்லை. முழு வாழ்க்கையும் துன்பம் நிறைந்தது. நீங்கள் இவ்வாறு வசிக்கவேண்டியவர்களா? இல்லை. இதனை நாங்கள் மாற்றியமைத்திடவேண்டும். இது வரை நிலவியது மக்களின் அரசாங்கங்கள் அல்ல. மேலே இருக்கின்ற தலைவர்களின் அரசாங்கமாகும். அவர்கள்தான் நாட்டை ஆட்சிசெய்தார்கள். அவர்களுக்காகவே தீர்மானங்களை மேற்கொண்டார்கள் - என்றார். (அ-ம)

# கட்டுமானப் பணிகளுக்கு புத்துயிர் அளியுங்கள்!

கொழும்பு, செப்.19

இலங்கை நிர்மாணிகள் சங்கம் 28 ஆலோசனைகள் அடங்கிய கோரிக்கை மனுவொன்றை பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கையளித்துள்ளது.

அந்த மனுவில்,

நிறுத்தப்பட்டுள்ள கட்டுமானப்பணிகளை மீள ஆரம்பியுங்கள், நிதி வழங்குநர்களை புதிய கட்டுமானப்பணிகளை ஆரம்பிக்குமாறு ஊக்குவியுங்கள்.

நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவியுங்கள். கட்டுமானப்பணிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசனைக்குழு ஒன்றை உருவாக்குங்கள்.

கட்டுமானப்பணிகளுக்கான நிதியம் ஒன்றை உருவாக்குங்கள். கட்டுமானத்துறையை ஒரு கைத்தொழில் துறையாகவும் ஊழலற்ற வகையில்அங்கீகரியுங்கள்.


கட்டுமானத்துறையைக் கொண்டு செல்வதற்கு கண்காணிப்பு பொறிமுறையொன்றை உருவாக்குங்கள். அபிவிருத்தித் திட்டங்களில் மக்கள் முதலீடுகளை மேற்கொள்ள வசதியாக வட்டி வீதங்களை குறையுங்கள். நிர்மாணத் துறையை ஏற்றுமதித்துறையாக மாற்றுவதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பை வழங்குங்கள்.

கட்டுமானத்துறையில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அனுசரணையாளராகவும், மாற்று வழிகளில் உதவுபவராகவும் செயற்படுங்கள்.

முறையான கேள்விப்பத்திரம் கோரப்படாத திட்டங்களை பரிசீலிப்பதற்கு ஒரு குழுவை நியமியுங்கள். கட்டுமானத் துறையில் பயிற்சிகள், தொழில் பாதுகாப்பு,திறன்கள், கட்டுமான ஆராய்ச்சிகள் என்பவற்றை ஊக்குவிப்பதுடன் அங்கீகாரமளியுங்கள். கட்டட நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றுநிருபங்கள்,சட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள் போன்ற ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ச-25, 6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 10 . 1936



மறைவு
16 . 09 . 2024

### வீரகத்தி நடராசா

**ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்)**

வடமராட்சி கரவெட்டி கிழக்கு கிழவிதோட்டப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், காளியாமூலை வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நடராசா (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் - மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) கடந்த 16.09.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி - தெய்வானை தம்பதியினரின் மகனும், பரமேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்) அன்புக் கணவரும், இராகுலன் (கனடா), தயாபரன் (அமெரிக்கா), கலாஜினி (ஆசிரியர் - கொழும்பு இராம கிருஷ்ண வித்தியாலயம்), பிரியதர்ஷினி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலினி (கனடா), சுதாஜினி (அமெரிக்கா), சிவகுமார் (பிரதிப் பணிப்பாளர் நாயகம் - மத்திய சுற்றாடல் அதிகாரசபை), செல்வேந்திர மூர்த்தி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சோபியா (கனடா), ஜஷன் (கனடா), லவீனியா (அமெரிக்கா), லஷாலி (அமெரிக்கா), மனோஜன் (கொழும்பு), ஆரணி (இலண்டன்), மாதங்கி (இலண்டன்), வர்ஷினி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு பாட்டனும், அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன் (இலண்டன்), காலஞ் சென்றவர்களான சிவபாக்கியம், பாலசிங்கம், யோகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை **(20.09.2024)** வெள்ளிக்கிழமை காலை அவரின் இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர், **22.09.2024** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில் ஈமக் கிரிகைகள் நடைபெற்று நுணாவில் மேற்கு, காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நலன் விரும்பிகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
ராகுலன் (மகன்) : +1 (416) 666 3021
தயாபரன் (மகன்) : +1 (408) 674 3305
சிவகுமார் (மருமகன்) : +94 71 532 8343
கலாஜினி (மகள்) : +94 77 740 4797
இந்திரன் (மருமகன்) : +44 7944 965408
பிரியதர்ஷினி (மகள்) : +44 7852 373847

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**இல.24, காளியாமூலை வீதி,**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி,**
**+94 21 205 0277**

## மரண அறிவித்தல்



### திரு. வீ. முருகேசபிள்ளை

**(ஓய்வுநிலை பிரதேச மருந்தாளர்)**

காரைதீவு, அம்பாறையைப் பிறப்பிடமாகவும், நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வீ. முருகேசபிள்ளை அவர்கள் நேற்று (18.09.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரக்குட்டி - சந்தனப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான J.V. தம்பிநாயகம் - ஹரியற் தம்பிநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அரியஜோதியின் (பிரதேச மருந்தாளர்) அன்புக் கணவரும், றொகான் (Managert Thurkas Exports), ஜிகான், ஜெனி (சித்த மருத்துவர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜனனி (யாழ்ப்பாணக் கல்லூரி), S.ரோபேட் எமில் (Proprietor Bastion Hotel) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆத்மீகா, ஆதனா, நிதிதனன், நிதிதனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.09.2024) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணி க்கு இல.33, கண்டி வீதி, யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று பின் நவாலி அமெரிக்கன் சிலோன் மிஷன் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**மகன் - 077 910 1031**
**மருமகன் - 077 974 3656**

**இல. 33, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/1396) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவத்தாட்சி அலுவலர்கள் மேற்பார்வையிட நியமனம்!

யாழ். மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்வதற்காக 51 வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களுக்கும் பொறுப்பாகவுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களை வழிப்படுத்தி, மேற்பார்வை செய்வதற்காக வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்
நியமிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு நீதியாகவும், சுதந்திரமாகவும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற ஒத்துழைப்பை வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (ச-45-66,9)



# தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து நல்லூரில் எழுச்சிப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 19

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் எழுச்சிப் பொதுக் கூட்டம் நேற்றுப் புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ் மன்னன் சங்கிலியனின் உருவச் சிலையடியில் மலர் அஞ்சலியுடன் ஆரம்பமான பொதுக்கூட்டத்தில் தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்புச் சார்ந்த முக்கியஸ்தர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மா. இளம்பிறையன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர். தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். (அ-ம-66-20)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## ஆதன மதிப்பீட்டு ஏடு காட்சிப்படுத்தல் மற்றும் ஆட்சேபனை தெரிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 வது மற்றும் 141(3) வது பிரிவுகளின் கீழ் பிரதேசசபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள பளைநகர வட்டாரத்திற்கான (பளைநகரம், புலோப்பளை மேற்கு, கச்சார்வெளி) அனைத்து வதிவிட, வர்த்தக கட்டடங்கள், காணிகள், வீடுகள் போன்ற நிலையான சொத்துக்களின் வருடாந்த மதிப்பை பதிவு செய்துள்ள மதிப்பீட்டு ஏடானது 20.09.2024 ஆம் திகதி தொடக்கம் 20.10.2024 வரையான அலுவலக நாட்களில் மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 4.00 வரையான காலப்பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் கட்டணங்கள் எதுவுமின்றி பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

குறித்த ஆதனங்களின் வருடாந்த மதிப்பீடு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் குறித்த கால எல்லைக்குள் செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது அலுவலகநாட்களில் மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரையிலான காலத்தினுள் நேரடியாக சமர்ப்பிக்கமுடியும் என்பதனையும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் ஆட்சேபனைகள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) உபபிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும் ஆதனங்களின் வருடாந்த மதிப்பின் பிரகாரமும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பளைநகர வட்டாரத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு அசையா சொத்தின் ஆண்டுப்பெறுமதியில் 4% இனை வீடுகளிற்கும், 5% இனை வர்த்தகக்கட்டங்களுக்கும் வருடாந்தவரியாக விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வட்டார ஆதனங்களின் மதிப்பீட்டு ஏட்டில் வருடாந்த மதிப்பீடு தொடர்பான விபரங்களை பார்வையிடுவதற்கு காணியின் உரிமையாளருக்கு அல்லது சட்டபூர்வமான குடியிருப்பாளருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்பதனை விசேடமாக தெரிவிப்பதுடன் மதிப்பீட்டு பதிவேட்டை பார்வையிடுவதற்காக வருவோர் தத்தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமாகவும் கருதப்படுகிறது. மேலும் ஆதனவரி அறவீடு தொடர்பான மேலதிக தகவல்களை பச்சிலைப்பள்ளி தலைமையலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்.

குறிப்பு:- பளைநகர வட்டாரத்தில் அமைந்துள்ள அனைத்து ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான உறுதி, 30வருட தோம்பு, மற்றும் நிலஅளவைப்படம், அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகளை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் எதிர்வரும் 20.10.2024 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

த. தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.

(CR/ 43249) J-1

# டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், செப்.19

யாழ். மாதகல் பிரதேசத்தில் மூன்று நாட்களுக்கான திடீர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்று புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படவுள்ளன. குடியிருப்புகள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், மத ஸ்தலங்கள் போன்றவை சோதனைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-25, 17)



# ஹொக்கி சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.19

சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஹொக்கி சுற்றுப்போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

போட்டியில் பெண்கள் அணியில் யாழ். பல்கலைக்கழகம் முதலாமிடத்தையும், பண்டத்தரிப்பு யுனிற்றட் இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்கள் மூன்றாமிடத்தையும், ஆண்கள் அணியில் யாழ். பல்கலைக்கழகம் முதலாமிடத்தையும், யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்கள் இரண்டாமிடத்தையும், பழைய மாணவர் கிறிம்சன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி.பி.எஸ்.டி.பத்திரன, யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேஷானந்தன், சுற்றுச்சூழல் அதிகாரசபை அதிகாரி, காவேரி கலா மன்றத்தின் நிர்வாக உத்தியோகத்தர் இன்பராஜ் சஹானா, யாழ்ப்பாணக் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் குகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-45-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபனை...

சட்டத்தரணி மணிவண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டோர் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை உணர்வுபூர்வமாக அஞ்சலிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில், இந்த நினைவேந்தல்களுக்குத் தடைகோரியே பொலிஸார் நீதிமன்றத்தை நாடியிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. சட்டத்தரணி மணிவண்ணன் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கிளிநொச்சியில் உள்ள வழக்கொன்றுக்காகச் சென்றதால் இந்த வழக்கில் அவரால் கலந்துகொள்ள முடியவில்லை. எதிராளிகள் தரப்பில் மூத்த சட்டத்தரணி சிறீகாந்தா தலைமையில் சட்டத்தரணிகள் திருக்குமரன், மகிந்தன், றமணன், ரிசிகேசன், கௌதமன் உள்ளிட்டவர்கள் மன்றில் முன்னிலையானார்கள்.

இரு தரப்பு விவாதங்களைக் கேட்டறிந்த நீதிவான் அ.ஆனந்தராஜா 2011ஆம் ஆண்டு புலிச் சின்னங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதித்தே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. மற்றும்படி இறந்தோரை அஞ்சலிக்கும் எந்தவொரு அஞ்சலி நிகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்படவில்லை. இதன் பின்னர் 13 ஆண்டுகளாக மக்கள் நினைவஞ்சலிகளைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றனர். அவற்றைத் தடுப்பதற்கு ஜனாதிபதியோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ அல்லது நாடாளுமன்றமோ எந்தச் சட்ட நடைமுறையையும் மேற்கொள்ளவில்லை. இவ்வாறிருக்கையில் பொலிஸார் தொடர்ச்சியாக அஞ்சலி நிகழ்வுகளுக்குத் தடை கோருவது ஏற்புடையது ஆகாது என்று தெரிவித்தார்.

தேர்தல் காலம் என்பதால், அதைக் கருத்திற்கொண்டு அஞ்சலிக்குத் தடை விதிக்கவேண்டும் என்றும் பொலிஸார் கோரினார்கள். இதற்கு, தேர்தல் காலத்தின்போது வாகனப் பேரணிகள் நடத்துவதற்கு மட்டுமே தடை விதிக்க முடியும் என்று தெரிவித்த நீதிவான் அவ்வாறு வாகனப் பேரணிகள் இடம்பெறாது என்பதற்கான உத்தரவாதங்களை எதிர்த்தரப்பினரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். அத்துடன் வழக்கை நீதிவான் முடிவுறுத்தினார்.

அத்துடன், ஒலிபெருக்கிப் பாவனைக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் பொலிஸாருக்கே உள்ளதால், அது தொடர்பில் பொலிஸார் இறுதி முடிவை எடுக்கலாம் என்றும் நீதிவான் அறிவுறுத்தினார். (அ-ம-26)

## ஜனாதிபதி...

மன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதியின் அரசியல் காரியாலயத்துக்கு நேற்றுச் சென்ற அவர் அங்கு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே, ஜனாதிபதி ரணிலுக்கான தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னி மக்களின் விருப்பத்தை அறிந்தவன் என்ற வகையிலே ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் முடிவைத் தெரிவிக்கின்றேன்.

மூன்று பிரதான வேட்பாளர்களில் அதிகூடிய தகைமைகளையும் ஆளுமையையும் அனுபவத்தையும் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க ஒருவர்தான். அவரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. நாட்டுக்கு அரசியல் பொருளாதார உறுதித்தன்மை அவசியம். ரணில் விக்கிரமசிங்க தான் நாட்டுக்கு விடிவைப் பெற்றுக் கொடுத்தார். இந்த பொருளாதார உறுதிப்பாடு தொடரவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம்கூட அறிவித்துள்ளது. இப்போதுள்ள இயல்புநிலை தொடர வேண்டுமாக இருந்தால் தற்போதுள்ள ஜனாதிபதி தொடர்ந்து ஆட்சி செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

மரதனோட்டப் பந்தயத்தில் பாதியை கடந்து வந்துள்ள நிலையில், ஓட்டத்தை மாற்றினால் புதிதாக வரும் தலைவர் ஆரம்பத்தில் இருந்து ஓடநேரிடும். எனவே, எஞ்சிய தூரத்தை ஜனாதிபதியால் தான் இலகுவாக ஓடிமுடிக்க முடியும் - என்றார். (அ-ம-26-110)

## 20 லட்சம்...

ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்திருந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சஜித் மேலும் தெரிவித்ததாவது:-

வன்முறை என்பது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையல்ல. மாற்றுக் கொள்கையோடு இருக்கின்ற எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த நாட்டைக் கட்டி எழுப்புகின்ற பயணத்தில் அனைவரையும் பங்காளர்களாக இணைத்துக் கொள்வோம். மத சுதந்திரத்தைக் கௌரவப்படுத்துவதோடு, பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய மதங்களை பின்பற்றுவதற்கு எவருக்கும் உரிமை இருப்பதனால், அந்த உரிமையை பாதுகாப்போம் - என்றார். (அ-ம)

## பிரபாகரனை...

புலிகள் அமைப்பை அழித்து ஒழிக்கலாம் என்ற எண்ணம் ஆரம்பம் முதலே என்னுள் இருந்தது. எனக்குரிய வாய்ப்புக் கிடைத்த சந்தர்ப்பத்தில் அதனைப் பயன்படுத்திக்கொண்டேன். போர் முடிந்துவிட்டது என்ற தகவல் கிடைத்ததும் மிகவும் பெருமையாக இருந்தது. ஆனால் பிரபாகரனை உயிருடன் பிடிக்கக்கூடியதாக இருந்திருந்தால் அது மேலும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

விமான நிலையத்தில் இருந்து இறங்கியதும் தாய் மண்ணுக்கு முத்தமிட்ட சம்பவம் உணர்வால் ஏற்பட்டது. இது திட்டமிட்டுச் செய்யப்பட்டதொன்றல்ல. அதே வேளை அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாமல் போனதால்தான் ராஜபக்சக்களுக்கு எதிராகப் போலிக்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன - என்றார். (அ-ம-44)

## தவறான...

இளைஞர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவுக்குத் தனது நண்பர்களுடன் சென்றுவிட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் மீண்டும் வீட்டுக்குத் திரும்பியவரே நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-159-66)

## ஓமந்தையில்...

வவுனியா - ஓமந்தை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார்சைக்கிளில் வந்துகொண்டிருந்த இருவர் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் பயணித்துக் கொண்டிருந்தபோது, வீதியில் நின்று கொண்டிருந்தவருடன் மோதியதையடுத்தே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வட்டக்கச்சி, மாயவனூர் பகுதியைச் சேர்ந்த வீரசிங்கம் ஜனிதரன் (வயது-40), வீதியில் நின்ற ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த சண்முகம் யோகராசா (வயது-47) ஆகிய இருவரும் மரணமடைந்தனர். சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18-110)

## தீயில்..

தீயில் எரிந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த மூதாட்டி, சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கிளாலி - எழுதுமட்டுவாழைச் சேர்ந்த நீக்கிலாஸ் வல்வைமரி (வயது-88) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி இரவு குப்பி விளக்குத் தட்டுப்பட்டதையடுத்து அந்த மூதாட்டியின் மீது தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. தீக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## மயங்கிச்...

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹொட்டல் ஒன்றில் பணியாற்றி வந்தவர் திடீரென மயங்கிச் சரிந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

காத்தான்குடியைச் சேர்ந்த மொகமட் மர்சூ (வயது-44) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் மயங்கிச் சரிந்த அவரை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது சிறிது நேரத்தில் அவர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கிருமித்...

பிறந்து 16 நாள்களேயான ஆண் சிசுவொன்று நேற்றுமுன்தினம் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தைக்குப் பாலூட்டியபோது பால் வெளியில் வந்துள்ளது. இதையடுத்து மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற நிலையில் குழந்தை உயிரிழந்துவிட்டதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது கிருமித்தொற்றே இறப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26-27)

## வாக்காளர்...

லாம் எனத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்தும் வாக்காளர் அட்டையைத் தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதே வேளை, வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டை அவசியமில்லையெனவும் வாக்காளர் இடாப்பில் பெயர் இருந்தால் வாக்களிக்கலாம் எனவும் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-ச-6)

## ஜனாதிபதித்...

தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அரியநேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்னும் இரண்டு தினங்களில் தேர்தல் இடம்பெறுகின்றது. தெளிவாக நாம் மக்களிடம் எமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளோம். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயம் என்பது சங்குச் சின்னத்துக்குத் தனியான வாக்குகளை வழங்குவதாகும். இது ஒரு வரலாற்றுக் கடமை.

இன்று (நேற்று) நள்ளிரவுடன் தேர்தல் பரப்புரைகள் முடிவுக்கு வருகின்றன. இதன் பின்னர் பல வதந்திகள் சதிகாரர்களால் பரப்பப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும். வடக்கு - கிழக்கில் எங்களின் பரப்புரைகளை முன்னெடுத்திருந்தாலும் தெற்குப் பகுதிகளிலும் என்னைப் பரப்புரைக்கு வருமாறு தமிழ் மக்கள் அழைத்தார்கள்.

நான் தற்போதும் தமிழரசுக் கட்சியுடன் தான் இருக்கின்றேன். 22ஆம் திகதிக்குப் பின்னர்தான் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் அடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் தெரியவரும். தமிழரசுக் கட்சியில் 90 வீதமானவர்களின் ஆதரவு எனக்கு உண்டு. அவசரமாகக் கூட்டப்பட்ட கூட்டத்தில்தான் சஜித்துக்கு ஆதரவு என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது - என்றார். (அ-ம-125-20)

## 22 மாவட்டங்களில்...

பம்பலப்பிட்டியவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

160 தேர்தல் தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஒருங்கிணைப்பாளர்களால் 3 நாட்களுக்கொருமுறை கணக்கெடுப்புகள் நடத்தப்படும். அதற்கமைய இன்று காலை (நேற்று) கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 22 மாவட்டங்களில் நாம் முன்னிலையிலிருக்கின்றோம். அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகூடிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 01 . 1974



இறப்பு 17 . 09 . 2024

### துரைஐயா கணேசானந்தன்

யாழ். ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைஐயா கணேசானந்தன் அவர்கள் கடந்த 17.09.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.


அன்னார், துரைஐயா-வள்ளிஅம்மை தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவி, நித்தியானந்தன், சற்குணானந்தன், யோகநாதன், சிவயோகமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற முத்துத்தம்பி, சாவித்திரிதேவி, பூமணி, பிள்ளைஅம்மா, சிறீகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், யானகி, யமுனா, சமினா, லிங்கேசன், அருணியா, அனோயா, அனோதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கரன், றீகன், நிசோத், நிரோஸ், நித்தியா, யோகதர்சினி, யோகதர்ஷன் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (20.09.2024) வெள்ளிக்கிழமை அன்று மு.ப 09:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 03 . 1943



மறைவு 16 . 09 . 2024

### கனகரத்தினம் தில்லைநாதன்

யாழ் ஆனைப்பந்தியடியை பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் றோட் தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் தில்லைநாதன் கடந்த (16.09.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-துரையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணேசு, மனோன்மணி, கண்ணம்மா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, சொர்ணலிங்கம், பரமேஸ்வரி, அரியமலர் மற்றும் ராஜேஸ்வரி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.09.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(CS 56238) J-1 077 933 2868, 074 255 2280


## மஹாளய பூசை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 19

இறந்த மூதாதையரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தனை செய்யும் பூசை வழிபாடுகள் ஆலயங்களில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்த மஹாளய பூசை வழிபாடு அடுத்த மாதம் இரண்டாம் திகதி வரை நடைபெறும். இந்தக் காலப்பகுதியில் மக்கள் இறந்த மூதாதையர்களுக்கான பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 10 . 1939



மறைவு 16 . 09 . 2024

### கனகம்மா சோமசுந்தரம் (சொர்ணம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா சோமசுந்தரம் (சொர்ணம்) அவர்கள் (16.09.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சோமசுந்தரம் அவர்களின் (முன்னாள் யாழ் மாநகரசபை ஆராய்ச்சி ) அருமை மனைவியும், திருக்குமார் (வவி - முன்னாள் உத்தியோகத்தர்- பொதுசன நூலகம்,யாழ்ப்பாணம்) விஜயகுமார் (UK) வினோதினி (UK)ஆகியோரின் அருமைத்தாயாரும், கமலராணி (குட்டி) , விஜயலட்சுமி (UK), சிறிதரன் (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலம்சென்றவர்களான ஏரம்பு, செல்லம்மா, இராசம்மா, செல்லையா, இராசையா, முத்தம்மா, சரஸ்வதிப்பிள்ளை, கிருஷ்ணசாமி, சிக்கிட்டி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலம்சென்றவர்களான சரஸ்வதி, பூரணானந்தம், தர்மலிங்கம், பராசக்தி, அருளம்பலம், இராசலிங்கம், இரத்தினம் - சோமசுந்தரம், சரஸ்வதி - சண்முகலிங்கம் மற்றும் சின்னம்மா, நேசராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், யசிதரன், விதுர்ஷா, சுவஸ்திகா, டிலான், டினோஜ், டினோயா, துவாரகன், கீர்த்திகன், துஷியா, ஆர்த்தி ஆகியோரின் ஆசைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2024) வியாழக்கிழமை இல - 50/15, ஆள்காட்டி வீதி, அரியாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனகிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.
மகன் - திருக்குமார்
077 245 8790

இல.50/15 ஆள்காட்டி வீதி,
அரியாலை.

(CS/56250) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 10 . 1947



மறைவு 17 . 09 . 2024

### வேலுப்பிள்ளை தவேஸ்வரன்

போக்காலை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தவேஸ்வரன் அவர்கள் நேற்று முன்தினம் (17.09.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் வேலுப்பிள்ளை - தவமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செல்வராணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சந்திரவதனாவின் அன்புக்கணவரும், ஷர்மிளா (லண்டன்), நிர்மினா (லண்டன்), தர்ஷன் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜன் (லண்டன்), அனுரதன் (லண்டன்), ஷோபா (மலேசியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஷ்வின், அட்சயன், வைஷ்ணவி, விஷாணவி, ஆதித்திரி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

No: 9 Jalan Dato yubus shanbuddn 45A
Jaman Mewah Jaya
Klang 41200, Sepungor
Malasia
+601 932 68149

போக்காலை வீதி,
உடுப்பிட்டி.

தகவல் :
குடும்பத்தினர்
077 653 3999
077 028 0271

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.